# Jai Nagar Development Association

(Zone – X, Division – 127, Corporation of Chennai ) (Regn. No. 321/1988)

No. 10, 5th Street, JAI NAGAR, Arumbakkam, Chennai – 600 106.



**L.Lakshminarayanan** President (9381000554) **C.Thanigaivel** Vice President (9884160974) **N.Chitti Babu** Secretary (9444979353) **M.Panneerselvan** Joint Secretary (9025730829) **I.Jesuraj** Treasurer (9840680595)

EXECUTIVE COMMITTEE MEMBERS

**V.R.Sithambaram** (23636374) **N.Arjunan** (9445230331) **T.Sundaramoorthy** (9884360529) **G.Ramamurthy** (9710084050)


சுற்றறிக்கை எண்: 7 / 2012 - 14 நாள் 06.04.2013

அன்பார்ந்த பெரியோர்களே, நண்பர்களே,

நமது ஜெய் நகர் மேம்பாட்டு சங்கத்தின் வெள்ளி விழா கொண்டாட்டங்கள் உங்கள் அனைவரது ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. கடந்த 24.03.2013 (ஞாயிறு) அன்று நடைபெற்ற 'சிறப்பு இலவச மருத்துவ முகாமில்' 220 பேர் கலந்து கொண்டு பயனடைந்தார்கள். இதில் கண் பரிசோதனை செய்து கொண்டோர் மட்டும் 116 பேர். காலை 09.15 மணியளவில் துவங்கிய முகாம் பிற்பகல் 02.30 மணிவரை நீடித்தது. கலந்து கொண்டு சிறப்பாக நடைபெற உதவிய **பில்ரோத் மருத்துவமனை**யின் **முதன்மை மருத்துவர் டாக்டர் சி.ராஜேந்திரன்** அவர்களுக்கும், **டாக்டர் மோகன்'ஸ் நீரிழிவு சிறப்பு மருத்துவ மையம்** சார்பிலும் **டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை** சார்பிலும் பங்கேற்ற மருத்துவக் குழுக்களுக்கும் நமது உளப்பூர்வமான நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

பரிசோதனைக்கு வந்தவர்களில் 80க்கும் மேற்பட்ட பயனாளிகளிடமிருந்து பரிசோதனைக்காக ரத்த மாதிரிகளை *(Blood Samples)* எடுத்து சென்று ஆய்வறிக்கைகளை தந்து உதவிய ***'Life Care'*** **இரத்த பரிசோதனை நிலைய** உரிமையாளர்களை நன்றியுடன் பாராட்ட கடமைப்பட்டுள்ளோம். தனி ஆளாக இருந்தும் சிரமம் பாராமல் பரிசோதனைக்கு வந்த அனைத்து பயனாளிகளுக்கும் **'இரத்த அழுத்தம்'** ***(Blood Pressure)*** பரிசோதித்து கூறிய வள்ளுவர் சாலை **ஸ்ரீ அருள் முருகன் மெடிக்கல்ஸ்** உரிமையாளர் **திருமதி மஹேஷ்வரி அவர்களை** நட்புடன் பாராட்டுகிறோம் வாழ்த்துகிறோம். **செல்வி சஞ்சனா** - 22வது தெருவில் வசிப்பவர்; பல் மருத்துவம் 3ம் ஆண்டு பயிலும் மாணவி - முகாமுக்கு வந்து உதவ வேண்டும் என்று கேட்டிருந்தோம். பரீட்சை நேரமாக இருந்தாலும் சமூக உணர்வுடன் சமூக-நலக்-கூடத்திற்கு வந்திருந்து முகாமுக்கு வந்த அனைவருக்கும் பதிவு படிவங்கள் எழுதிகொடுத்து உதவிய செல்வி சஞ்சனாவை மனமாற வாழ்த்துகிறோம்.

அனைவரும் மிகவும் எதிர்ப்பார்த்த திருமதி **டாக்டர் நிரஞ்சனா தேவி அவர்கள்** முகாமில் கலந்து கொள்ளமுடியவில்லை. இலவச மருத்துவ முகாமிற்கு முதலில் ஆலோசனை கூறிய அவரால் மாமியாரின் திடீர் மறைவின் காரணமாக நெல்லை செல்லவேண்டியிருந்ததால் முகாமில் கலந்து கொள்ளமுடியவில்லை. இதனால் எலும்பு சத்து குறைபாடு பரிசோதனையும், இரத்த சோகை பரிசோதனையும் மேலும் பெண்கள் சம்பந்தபட்ட வேறு சில பிரச்னைகளையும் பரிசோதித்துக்கொள்ள முடியவில்லை. இருந்தாலும் *'Life Care'* இரத்த பரிசோதனை நிலையம் வழங்கிய *Blood Report* அடிப்படையில் மார்ச் 25 (திங்கள்) அன்றும் அதற்குப்பின் ஒரிரு நாட்களும் முகாமில் கலந்துகொண்ட 70க்கும் மேற்பட்டவர்களை இலவசமாக பரிசோதித்து இலவசமாக மருந்துகளையும் வழங்கினார். அவருக்கு நமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம். வேறு ஒரு சந்தர்ப்பத்தில் திருமதி **டாக்டர் நிரஞ்சனா தேவி அவர்கள்** கலந்து கொள்ளும் வகையில் ஒரு முகாம் நடத்த கேட்டுள்ளோம் அவரும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

மருத்துவ முகாம் பப்ளிசிட்டிக்கு ஃப்ளக்ஸ் பேனர்கள் அச்சடித்து வழங்கியும், புகைப்படங்கள் எடுத்து முகாமை பதிவு செய்தும் உதவிய **'ஸ்ரீ சாய் பிரௌசிங் செண்டர்'** (15வது தெரு) உரிமையாளர் **திரு விஜய் குமார்** அவர்களுக்கு நமது நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். சங்க கமிட்டி உறுப்பினராக இல்லாவிடிலும் முகாமின் வெற்றிக்கு முழுமையாக தோள் கொடுத்த **திரு**

**N.ரமேஷ்குமார்** (21வது தெரு) அவர்களுக்கும், செல்வி சஞ்சனாவுடன் ஈடாக படிவங்களை பதிவு செய்து கொடுத்த **திரு G.N.கோபலன்** (17வது தெரு) அவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். இது மட்டுமல்ல, **டாக்டர் திரு தனஞ்சயன்** (22வது தெரு) அவர்கள் குழந்தைகளுக்கு இலவசமாக பூச்சி மருந்து கொடுத்து உதவினார். அவருக்கு நமது நன்றி.

முகாமில் பங்கேற்ற மருத்துவக்குழு நண்பர்களுக்கு காலை சிற்றுண்டிக்கும் மதிய உணவுக்கும் உதவிபுரிந்த **லயன் திரு ராமசாமி, லயன் திரு கண்ணன்** (6வது தெரு) ஆகியோருக்கும், **ஸ்ரீ சாய் ஃபாஸ்ட் ஃபுட்** உரிமையாளர் **திரு C.சீனிவாசன்** அவர்களுக்கும்; முகாமிற்கு மேஜை நாற்காலிகளை விலை குறைத்து வழங்கிய **ஆர்.பி.சீ.ஃபர்னிச்சர்** உரிமையாளர் **திரு கேசவன்** அவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

வெள்ளிவிழா கொண்டாட்டங்களின் அடுத்த நிகழ்வு 5ம் வகுப்பு வரை படிக்கும் சிறார்களுக்கு வரும் 13.04.2013 அன்று காலை 8.30 மணி முதல் சங்க அலுவலக வளாகத்தில் (10, 5வது தெரு) சில போட்டிகள் நடைபெறும். விருப்பம் உள்ள அனைவரும் சங்க அலுவலகத்தில் 13.04.2013 அன்று காலை 8.30 மணிக்கு நேரடியாகவே கலந்து கொள்ளலாம்.

வெள்ளிவிழா கொண்டாட்டங்களின் நிறைவாக வரும் **ஏப்ரல் 28, 2013 (ஞாயிறு)** அன்று மாலை 04.00 மணிக்கு பரிசளிப்பு விழா மற்றும் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. ***வணக்கத்திற்குரிய மேயர் திரு*** **சைதை துரைசாமி** ***அவர்களும்***, நமது *மாமன்ற உறுப்பினர்* ***திரு*** **மலைராஜன்** ***அவர்களும்***, மற்றும் சிலரும் சிறப்பிக்க உள்ளார்கள். சங்க அலுவலகம் அமைந்துள்ள 5வது தெருவில் இந்த நிறைவு விழா கூட்டம் நடைறெும். ஜெய் நகர் பகுதி வாழ் மக்கள் அனைவரும் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறோம்.

ஜெய் நகர் மேம்பாட்டு சங்க உறுப்பினர்களாகிய உங்களிடம் வசூலித்த சந்தா நன்கொடைகளை கொண்டு கட்டிய சிறிய கட்டிடத்தில் ஜெய் நகர் மேம்பாட்டு சங்க அலுவலகம் தற்போது செயல்பட்டு வருகிறது. சங்க அலுவலக பயன்பாட்டிற்கு மட்டுமல்லாமல் இந்த கட்டிடம் கிளை நூலகமாக பயன்படுத்தப்படுகிறது; பால் நுகர்வோர் மாதாந்திர அட்டை வழங்கும் இடமாக பயன்படுத்தப்படுகிறது; மாநகராட்சி சொத்துவரி வசூலிக்கும் இடமாக பயன்படுத்தப்படுகிறது. அலுவலக கட்டிடத்தை மேலும் பயனுள்ள வகையில் விரிவாக்க உத்தேசித்துள்ளோம். கட்டிடம் கட்ட உத்தேசித்துள்ளதால் விருப்பமுள்ள அனைவரும் சங்கத்திற்கு தங்கள் உதவிகளை பொருளாகவோ அல்லது பணமாசவோ தந்து உதவ கேட்டுக்கொள்கிறோம்.

செயற்குழுவின் சார்ப்பில்,


**N.சிட்டிபாபு**
செயலாளர் - 9444979353

**L.லக்ஷ்மிநாராயணன்**
தலைவர் - 9381000554


**தங்கள் கவனத்திற்கு**

**பால் அட்டை:**

தற்போது மாதத்தில் ஒரு நாள், அதாவது பிரதி மாதமும் **3ம் தேதி,** மட்டும் வழங்கப்படும்.

**சொத்து வரி கட்ட:**

ஒவ்வொரு ஆண்டும் **மார்ச்** மற்றும் **செப்டம்பர்** மாதங்களில் **இரண்டாவது ஞாயிறு** அன்று காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை சங்க அலுவலகத்தில் மாநகராட்சி அலுவலர்களால் வசூலிக்கப்படும்.

**வருடாந்திர நன்கொடை:**

2012-13 ஆண்டுக்கான வருடாந்திர நன்கொடை ரூ.250/- வழங்க சந்தர்பம் கிடைக்காத அனைவரும் அவரவர் பகுதி பொருப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள சங்க கமிட்டி உறுப்பினர்களிடம் தயைகூர்ந்து வழங்கி உதவிடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.